முருகப்பெருமான் துணை

**மகான் எறிபத்த நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.02.2023, செவ்வாய்கிழமை

1. கலிதனில் ஞானவான்கள் தன்னை
கருணை கொண்டு உருவாக்கி
அழியாமை வரம் தரும் ஞானியே
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது கலை திங்கள்
குறைவிலா அறுநான்குதிகதி குசன்வாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் 24 ம் நாள் 07.02.2023, செவ்வாய்கிழமை)
அறிவிப்பேன் அனுகூல ஆசியை
அரங்கனுக்கு எறிபத்த நாயனார் யானும்
3. யானுரைக்க உலகமக்கள்தானும்
எளிய சன்மார்க்க நெறியை
ஞானமாக ஏற்று வருதலுற
நன்னடத்தை எண்ணம் தூய்மை கூடி
4. கூடியே உலகியல் வாழ்வில்
குறைபாடுகளை எல்லாம் களைந்து
தேடியே ஞானிகளை வணங்கி
தேசிகன் காட்டும் அன்னதான
5. அன்னதான சேவை வழியில்
அனைவரும் தொண்டாற்றியே
மன்னவன் போல மாதரும
மகா சக்தியையும் அடைந்து
6. அடைந்துமே நாளும்நாளும்
ஆற்றல் பெருகி அரங்கமகான்
தடையிலா தரும தவபலமான
தக்கஆசி தீட்சை பலத்தால்
7. பலத்தால் அனைவரும் தேறி
பழுதின்றி ஞானவான்களாக
வலம் வருவர் உலகைமாற்ற
வணங்கி உலக மக்களும்தொடர
8. தொடரவே நல்ல மாற்றமாக
தேசமெல்லாம் ஞானிகளாக
தடையற உலகமக்கள் தேறி
தரணியையே ஞானவழி மாற்றுவர்
9. மாற்றுவர் ஞானத் தலைமையாக
மகான்கள் ஆட்சியுமாக
மாற்றம் தந்து சடுதி
மனிதர்கள் ஆட்சிக்கு முடிவுதந்து

10. தந்துமே ஞான ஆட்சியாக
தவராஜன் விரும்ப வேண்ட
கந்தவேலனும் இறங்கி இனிதே
கலியினில் அற்புதம் நிகழ்த்த

11. நிகழ்த்த பேருலகம் எல்லாம்
ஞானவான்கள் கொண்டநல்
வகையான ஞான ஆட்சி படைப்பர்
வழங்கிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–